**திருவாரூர் மாவட்ட கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்.**
**முன்னிலை: திருமதி. ஜி.ஆர்.லலிதா, பி.ஏ.,**

ந.க. எண்: 2095 / 2019 / அ1 , நாள்:.10.03.2020.

| | |
|---|---|
| **பொருள்** | பணியமைப்பு - கருவூல கணக்குத்துறை - திருவாரூர் மாவட்ட கருவூலஅலகு - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV-ல் அடங்கிய பணிகளுக்கான போட்டித்தேர்வு **2015-2016, 2016-2017** மற்றும் **2017-2018** - திருவாரூர் மாவட்டக் கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிபுரிந்து வரும் திருமதி. ஜெ.ஜெயசித்ரா, தட்டச்சர் என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக. |
| **பார்வை** | 1. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாயைம், சென்னை -3, கடித எண் 1755/PSD-F /2019, நாள். 20.02.2019..<br>2. முதன்மை செயலர் / ஆணையர், கருவூல கணக்குத்துறை, சென்னை 35 அவர்களின் செயல் முறை ஆணை ந.க. 7725/2019/சி3, நாள்.01.03.2019.<br>3. கருவூல அலுவலர்,திருவாரூர் அவர்களது செயல்முறை ஆணைகள் ந.க.2095/2019/அ1, நாள்: 05.03.2019.<br>4. இதர தொடர்புடைய ஆவணங்கள். |

ooOoo

**ஆணை:-**

பார்வை 1-இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV-ல் அடங்கிய பணிகளுக்கான போட்டித்தேர்வு **2015-2016, 2016-2017** மற்றும் **2017-2018** - ல் தேர்ச்சிப் பெற்று, தமிழ்நாடு அமைச்சுப்பணிகளில் தட்டச்சராக கருவூலக் கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3ல் காணும் செயல்முறை ஆணையின் வழியாக, பணிநியமனம் வழங்கப்பட்ட திருமதி. ஜெ.ஜெயசித்ரா, தட்டச்சர் என்பவருக்கு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 23(ஏ)யின் படி அவர்கள் தட்டச்சராக முறையாக பணியில் சேர்ந்த **05.03.2019** முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேலும், இந்த பணிவரன் முறை ஆணையானது சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளை ஆகியவற்றில் இந்த பணி அமர்வு சம்மந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது .

("The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relationg to the recruitment to the post included in CCSE-IV for the year 2015-2016, 2016-2017 and 2017-2018 " )

3) மேற்கண்ட பணியாளர் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகாலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

4) மேலும், மேற்குறிப்பிட்ட பணியாளர் தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வித்துறையால் நடத்தப்படும் **Computer on Office Automation** தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சிப் பெற்ற பின்னரே தொடர்புடைய பணியாளருக்கு தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கருவூல அலுவலர்,
திருவாரூர்.

பெறுநர் : திருமதி. ஜெ.ஜெயசித்ரா, தட்டச்சர்,
மாவட்ட கருவூலம்,
திருவாரூர்.

நகல்:
1. அ-1 இருக்கை.
2. இருப்பு கோப்பு .